பல்லவபுரம் நகராட்சி அலுவலகம்,
குரோம்பேட்டை,
சென்னை 600 044.

ந.க.எண்.1811/10/எச்1 நாள் 16.06.2010

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

பல்லவபுரம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவிற்கு தேவைப்படும் கீழ்க்கண்ட பொருட்கள் சப்ளை செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆணையாளர் மற்றும் அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் 02.07.2010–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணி வரை பெற்று கொள்ளப்படும். அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை 3.30 மணிக்கு ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். (இதர விவரங்களை அலுவலக வேலை நேரத்தில் பொது சுகாதார பிரிவில் நேரில் தெரிந்துக் கொள்ளலாம்) ஒப்பந்தப்புள்ளி நமுனா 18.06.2010 முதல் 01.07.2010 வரை அலுவலக நேரத்தில் உரிய தொகை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

| வ எண் | பணியின் விவரம் | பொறுப்புத் தொகை ரூ. | ஒப்பந்த படிவத்தின் விலை ரூ |
|---|---|---|---|
| 01 | துப்புரவு பணிக்குத் தேவையான நீர்த்த சுண்ணாம்பு சப்ளை செய்தல் | 1000/– | 338/– |
| 02 | பிளிச்சிங் பவுடர் சப்ளை செய்தல் | 2600/– | 845/– |
| 03 | பினாயில் சப்ளை செய்தல் | 1000/– | 338/– |

இந்நகராட்சியின் இணைதள முகவரியில் (http://municipality.tn.gov.in/tenders) ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை தபாலில் பெற விரும்புவோர் ஒப்பந்தப்புள்ளி நமூனாவிற்கான விலையுடன் கூடுதலாக ரூ.200/–க்கான வங்கி வரைவோலையை ஆணையாளர், பல்லவபுரம் நகராட்சி பெயரில் சென்னையில் மாற்றத்தக்கதாக எடுத்து கோரிக்கை கடிதத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஒப்பந்தப்புள்ளி நமூனா கிடைக்கப் பெறாமல் இருந்தாலோ அல்லது தாமதமாக கிடைத்தாலோ அதற்கு ஆணையாளர் பொறுப்பாக மாட்டார். கூடுதல் விவரம் தேவைப்படின் நகராட்சி பொறியியல் பிரிவில் கேட்டும் அல்லது நகராட்சியின் மின் அஞ்சல் முகவரி மூலமாக கேட்டும் (commr.pallavapuram@tn.gov.in) தெரிந்துக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத் தொகையை 01.01.2010–க்கு பின் எடுக்கப்பட்ட தேசிய சேமிப்பு பத்திரமாக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து சமர்பிக்க

வேண்டும். ஒப்பந்தப்புள்ளி நாள் அலுவலக விடுமுறை நாளாக இருந்தால் அடுத்த அலுவலக வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் ஏற்கவோ, அல்லது நிராகரிக்கவோ நகர் மன்றத்திற்கு முழு உரிமையுண்டு. மேலும் இதர விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்துக் கொள்ளலாம்.

ஆணையாளர்
பல்லவபுரம் நகராட்சி

பெறுநர்
உள்ளூர் நிறுவனங்கள்
அலுவலக தகவல் விளம்பர பலகை.